மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அரும்பாக்கத்திலே உள்ள பேரறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனையில் யுனானி மருந்துகள் டையபட்டீஸ்க்காக இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மேடு கிராமத்திலுள்ள அரசு மருந்தகத்தில் அளிக்கப்படும் சித்த மருத்துவம்

362—(*வினா எண். 16955)—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டம் வாய்மேடு கிராமத்தில் உள்ள அரசு மருந்தகத்தில் சித்த மருத்துவம் மட்டுமே உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை ஆங்கிலமுறை மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.
(ஆ) இல்லை.

மேலூர் அரசு மருத்துவமனைக்குப் புதிய ஆம்புலன்ஸ் வண்டி வழங்கும் திட்டம்

363—(*வினா எண். 21444)—திரு. கு. வே. வீராணம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அரசு மருத்துவமனைக்குப் புதிதாக ஆம்புலன்ஸ் வண்டி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது வழங்கப்படும்?

(இ) இம்மருத்துவமனையில் மகப்பேறு படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க செயற்குறிப்பு உள்ளதா?

(ஈ) இம் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

(இ) இல்லை.

(ஈ) செயற்குறிப்புகள் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.